தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 19

2011 செப்டம்பர் 5, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு."

குறைவு இல்லாத விளைபொருள்களை உற்பத்தி செய்வோரும், தகுதி மிக்க அறிஞர்களும், தீய வழியில் இல்லாமல் நல்வழியில் பொருள் சேர்த்த செல்வர்களும் ஒருசேரப் பொருந்தி உள்ள நாடே சிறந்த நாடாகும்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. வி. சுப்பிரமணியன் அவர்கள் 31–8–2011 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. வி. சுப்பிரமணியன் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் உளுந்தூர்பேட்டை தொகுதியிலிருந்தும், 1980–1984 ஆம் ஆண்டுகளில் திருநாவலூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

மின் வசதி

***757—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலை கிராமத்திற்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், பாலமலை கிராமத்தில் பாலமலை மேல் அமைந்துள்ள 12 குக்கிராமங்களுக்கு மின் வசதி அமைத்துத் தருவதற்கு சுமார் 12 கி.மீ. தூரம் புதிய மின் பாதை அமைக்கப்பட வேண்டும்.